**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

## அவசரக் கூட்டப்பொருள்

2013ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6ஆம் நாள் புதன்கிழமை மதியம் 2.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| 06.02.13 | **வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் அவசரத் தீர்மானம்**<br><br>சிறப்பு சாலை திட்டம் 2010–11ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.200.00 இலட்சத்தில் பணிகள் முடிவுற்று சேமிப்புத் தொகையாக தற்போதுள்ள தொகை ரூ.150.00 இலட்சத்தில் மாநகரப் பகுதிகளில் மழைக்காலங்களில் பாதிப்படைந்த கீழ்க்கண்ட தெருக்களில், | 19) ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது |

| வார்டு எண் | தெருப் பெயர் |
|---|---|
| 14 | ராஜமன்னார் தெரு |
| | ராஜமன்னார் தெரு |
| 17 | பொன் சுப்பையா நகர் I, |
| | தஸ்நேவிஸ் நகர்–I |
| 18 | சங்குகுளி காலனி கிழ, மேல் சாலை |
| 21 | திரேஸ்புரம் (முனியசாமி கோவில் தெரு – மலர் மருத்துவமனை பின்புறம்) |
| 24 | சின்னக்கடை சந்து |
| 25 | கிப்சன்புரம், |
| | மேலூர் பங்களாத்தெரு |
| 27 | ஜெயிலானித்தெரு |
| 31 | கணேசபுரம் (சுமங்கலி திருமண மண்டபம் எதிர்புறம்) |
| | ஜார்ஜ்ரோடு – கல்லறைதோட்டம் அருகாமையில் உள்ள சாலை |
| 32 | லயன்ஸ்டவுண் 1, 2, 4, 5, 6 தெருக்கள் |
| 55 | பாரதிநகர் (பால்பண்ணைத் தெரு) சுபாஷ்நகர் |
| | **மொத்தம்** |

மேற்படி இடங்களில் சாலை வசதிகள் செய்வதற்கு நடப்பு நிதியாண்டில் அலுவலக ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றம் தீர்மானிக்க.

| | | | |
|---|---|---|---|
| 06.02.13 | 1. | இம்மாநகராட்சி 60 வார்டு பகுதிகளில் வார்டு ஒன்றுக்கு 5 தெரு விளக்குகள் வீதம் 60 வார்டுக்கும் 300 எண்ணம் தெரு விளக்குகள் அமைப்பதற்கும் அதற்கு உரிய செலவினத் தொகை மின்சார வாரியத்துக்கு செலுத்துவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத் தொகை திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்க்கலாம்.<br>இ3/08443/12 | 20) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 2. | தூத்துக்குடி மாநகராட்சி முத்துகிருஷ்ணாபுரம் 6வது தெருவில் சர்வே வார்டு 4, பிளாக் 48 நகரளவு எண் 5858/3 மற்றும் 5828/4ல் உள்ள மாநகராட்சி இடத்திலுள்ள ஆக்கிரமிப்புகள் மாநகராட்சி பணியாளர்களால் காவல்துறை உதவியுடன் 20.12.2012 அன்று அப்புறப்படுத்தப்பட்டது. மேற்படி மாநகராட்சி இடத்தின் உரிமையை மறைத்து முத்துகிருஷ்ணாபுரம் அருந்ததியர் ஸ்ரீகாளியம்மாள் கோவில் தர்மகர்த்தா என்ற பெயரில் திரு. சந்தனராஜ் என்பவர் மீது மேற்படி இடம் உரிமை தொடர்பாக தூத்துக்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் I.A.No.2660/2012 in O.S.No.572/2012ல் தற்காலிக மற்றும் நிரந்தர உறுத்து கட்டளை வேண்டி வழக்கு தொடர்ந்துள்ளார்.<br><br>மேற்படி நகரளவு எண் 5828/4 பகுதியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு சத்துணவு மையம் அமைப்பதற்கு மாமன்றத்தில் தீர்மான எண் 282 நாள் 24.12.2012ல் மாமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ள நிலையில் மாநகராட்சிக்குரிய உரிமையை இவ்வழக்கில் கட்சியாக சேர்த்து நீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இல்லாத பட்சத்தில் வழக்கு வாதிக்கு அனுகூலமாக உறுத்துக் கட்டளை பிறப்பிக்க வாய்ப்பு உள்ளதால் மேற்கண்ட வழக்கில் மாநகராட்சி சார்பாக மாமன்ற வழக்கறிஞர் ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினங்களுக்கும் மன்றத்தின் முன் அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு :</u>** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>எப்1/241/2013 | 21) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 3. | இம்மாநகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் 15.06.2007 முதல் துப்புரவு ஆய்வராக பணிபுரிந்து வருகின்ற திரு. என்.முருகேசன் என்பவர் தனது மனைவி கோயம்புத்தூரில் பணிபுரிந்து வருவதாலும், தனது மகனின் மேல்நிலைப் படிப்பின் காரணமாகவும், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒரு வழி மாறுதல் கோரியுள்ளார். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கடித எண் 27274 மா.ந.396–1 நாள் 18.07.1996ல் மாறுதல் கோரும் மனுவை பரிசீலித்து மன்ற அனுமதி பெற்று மன்ற தீர்மான நகல், மாற்றம் கோரும் மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே துப்புரவு ஆய்வர் திரு. என்.முருகேசன் குடும்ப சூழ்நிலையினை கருத்தில் கொண்டு அன்னாரை கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு பணி மாறுதல் செய்வது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு :</u>** அனுமதிக்கலாம்<br>எச்1/5901/12 | 22) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 4. | இம்மாநகராட்சி புதிய பேருந்து நிலையம் உழவர் சந்தைக்கு அருகிலுள்ள மாநகராட்சி திறந்தவெளி மைதானத்தில் மத சம்பந்தமான கூட்டங்கள் நடத்த நாள் ஒன்றுக்கு ரூ.500/– வீதம் கட்டணம் வசூலிக்க 29.06.2004ம் தேதிய மன்ற தீர்மான எண் 1004ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதை கட்டணங்கள் மாற்றியமைத்து தற்போது மேற்படி மாநகராட்சி மைதானத்தில் உழவர் சந்தைக்கு மேற்கு பகுதியில் உள்ள இடத்தில் மத சம்பந்தமான கூட்டங்கள் நடத்த நாள் ஒன்றிற்கு கட்டணம் ரூ.3000/– மற்றும் மத சம்பந்தமில்லாத பயன்பாட்டிற்கு நாள் ஒன்றிற்கு ரூ.5000/– என நிர்ணயம் செய்து கட்டணம் வசூலிக்க 30.03.2012ம் தேதிய மாமன்ற தீர்மான எண் 40ல் அனுமதிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. | 23) இப்பொருள் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால் இப்பொருள் ஒத்தி வைக்க தீர்மானிக்கப்பட்டது. |

மேற்கண்ட புதிய பேருந்து நிலையம் உழவர் சந்தைக்கு மேற்கு பக்கம் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் மாநகராட்சி வடக்கு மண்டலம் அலுவலகம் கட்டுவதற்கு 29.11.2011ம் தேதிய மாமன்ற தீர்மான எண் 244ல் ஒப்புதல் வழங்கப்பட்டு கட்டிட வேலை துவக்கப்பட்டுள்ளதாலும், உழவர் சந்தைக்கு கிழக்கு பகுதியில் ஆம்னி பேருந்துகள் நிற்பதற்கு இடம் தேவைப்படுவதாலும் தற்போது போக்குவரத்து நெருக்கடி மிகவும் அதிகமாக உள்ளதாலும் பொதுமக்களின் நலன் கருதி இனிவரும் காலங்களில் மேற்படி மாநகராட்சி புதிய பேருந்து நிலைய வளாகத்தினுள் எந்தவித கூட்டங்களும் நடத்த அனுமதி வழங்க இயலாது என்பதால் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட மாமன்ற தீர்மானம் எண் 40 நாள் 30.03.2012 ரத்து செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுதிக்கலாம்.

எப்1/433/2012

---

5. தூத்துக்குடி மாநகராட்சியில் உள்ள இராஜாஜி பூங்காவில் உள்ள தென்னைமரம் ஒன்று பட்டுப்போன நிலையிலும், நாவல் மரத்தின் கிளை ஒன்று உடைந்து கீழே விழும் நிலையிலும், பூங்கா நுழைவு வாயிலில் உள்ள பழைய வாகைமரத்தின் கிளை தாழ்ந்து, போக்குவரத்திற்கு இடையூறான நிலையிலும், சுகாதார அலுவலகம் அருகில் பழைய நாவல்மரம் ஒன்று விழுந்த நிலையிலும் உள்ளதால், மேற்படி மரம் மற்றும் துண்டுகளை 11.01.2013ம் தேதியன்று இம்மாநகராட்சி அலுவலகத்தில் ஏலம் விடப்பட்டது. மேற்படி பொது ஏலத்தில் கீழ்க்கண்ட விவரப்படி இரண்டு நபர்கள் மட்டும் கலந்து கொண்டார்கள்.

| வ. எண் | ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் பெயர் விவரம் | ஏலக்கேள்வி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திரு. டி.முருகன், ஒப்பந்தக்காரர்<br>63பி, கே.வி.கே.நகர், தூத்துக்குடி | ரூ.2500/– |
| 2. | திரு. பி.கணேசன்,<br>10எச்/1, பிரையண்ட்நகர் 5ம் தெரு கிழக்கு<br>தூத்துக்குடி | ரூ. 2300/– |

மேற்படி ஏலத்தில் உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.2500/–க்கு ஏலதாரர் திரு.டி.முருகன் என்பவர் ஏலம் கேட்டுள்ளார். எனவே மேற்படி ஏலதாரர் திரு. டி.முருகன் என்பவரின் உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.2500/–ஐ ஏற்றுக்கொள்வதற்கும் மேற்படியாருக்கு ஏலம் விடப்பட்ட மரம் மற்றும் துண்டுகளை அகற்றுவதற்கு வேலை உத்திரவு வழங்குவதற்கும், ஏலத்தில் கலந்து கொண்ட ஏலதாரர்களுக்கு உரிய முன்வைப்புத் தொகைகளை திரும்ப வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

இ5/21379/12

24) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

---

6. தூத்துக்குடி மாநகராட்சியில் நடைபெற்ற மற்றும் நடைபெற்று வரும் 2011–12 மற்றும் 2012–13ம் ஆண்டுக்குரிய திட்டப் பணிகள் விவரம் குறித்து 01.12.2012ம் தேதியில் “மக்கள் குரல்’’ நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி வகைக்கு ஆகும் விளம்பரக் கட்டணத் தொகை ரூ.37600/–க்கு மேற்படி மக்கள் குரல் நாளிதழ் நிறுவனத்தார் பட்டியல் எண் MAB 2308407 நாள் 01.12.2012ல் விளம்பர கட்டணப் பட்டியலை இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பித்துள்ளனர்.

எனவே மேற்படி பட்டியலில் கண்டுள்ள விளம்பரக் கட்டணத் தொகை ரூ.37600/–ஐ மேற்படி மக்கள் குரல் நாளிதழ் நிறுவனத்தார், சென்னை அவர்களுக்கு வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

இ5/21691/12

25) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

7. இம்மாநகராட்சியின் பொதுசுகாதார பிரிவின் கீழ் இயங்குகின்ற நகர்நல மையங்களில் பணிபுரிந்து 18.11.2012 மற்றும் 31.12.2012 அன்று வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற கீழ்க்கண்டுள்ள பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை, வட்டி மற்றும் அரசின் பங்கீட்டு தொகை ஆகியன கணக்கிடப்பட்டு கீழ்க்கண்டுள்ளவாறு வழங்க வேண்டியுள்ளது.

| வ. எண் | பணியாளர் பெயர் திரு/திருமதி | ஓய்வு பெற்ற தேதி | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை | வட்டி | பங்கீட்டுத் தொகை | மொத்தப் |
|---|---|---|---|---|---|---|
| 1. | திரு. இசக்கி/மூக்கன் மலேரியா தலைமை பணியாளர் | 31.12.12 | 2960.00 | 14389/– | 10000/– | 27349/– |
| 2. | திரு. அய்யாச்சாமி/ கோமதிநாயகம், மலேரியா பணியாளர் | 18.11.12 | 2960.00 | 14181/– | 10000/– | 27141/– |
| | **மொத்தம்** | | **5920.00** | **28570/–** | **20000/–** | **54490/–** |

எனவே பட்டியலில் குறிப்பிபிப்பட்டுள்ள பணியாளர்களுக்கு மேற்கண்ட தொகையினை மாநகராட்சியின் பொது நிதியில் இருந்து வழங்க மாமன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** அனுமதிக்கலாம்

எச்2/00064/13

26) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

8. தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் உள்ள பூங்காக்கள் மற்றும் சாலைகள் ஆகியவற்றை மேம்படுத்திட வ.உ.சி. துறைமுக பொறுப்பு கழகம், தூத்துக்குடி அவர்களுக்கு கார்ப்பரேட் சோஷியல் ரெஸ்பான்சிலிட்டி (CSR) நிதியிலிருந்து இம்மாநகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்ய கேட்டதில் மேற்படி நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற 10.01.2013ஆம் தேதிய ளு–1/3–2012 எண்ணிட்ட கடிதத்தில் கிழ்க்கண்ட பகுதியில் உள்ள பூங்கா மற்றும் சாலை பகுதிகளை சீரமைக்கவும், வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணிக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்ட பின்னர் நிதி ஒதுக்கீடு செய்து தரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பூங்கா மற்றும் சாலை பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | டுவிபுரம் சங்கரநாராயணன் பூங்கா அபிவிருத்தி செய்யும் பணி | ரூ. 50.00 |
| 2. | லயன்ஸ்டவுன் பகுதி 1 முதல் 7 தெரு வரை தார்சாலை மற்றும் வடிகால், சிறுபாலம் கட்டும் பணி | ரூ. 36.40 |
| 3. | லயன்ஸ்டவுன் பகுதி 1 முதல் 7 தெரு வரை வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணி | ரூ. 27.30 |
| | மொத்தம் | ரூ. 113.70 |

எனவே மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள பகுதிகளில் பூங்கா மற்றும் சாலை பகுதிகளை சீரமைக்கவும், வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணியினை வ.உ.சி. துறைமுக பொறுப்புக் கழகம், தூத்துக்குடி அவர்களின் கார்ப்பரேட் சோஷியல் ரெஸ்பான்சிலிட்டி (CSR) நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்

இ1/19926/2012

27) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | 9. | தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2012–13ன் கீழ் சிப்பம் 3ல் கண்டுள்ள சாலை பணிகளுக்கு 31.01.2013 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு<br>1. திருமதி சிந்து, ஒப்பந்தகாரர்<br>2. ஜெயவைரவன் இஞ்சினியரிங் கோ (பி) லிட்.<br>3. திரு. எஸ். ரம்போலா, ஒப்பந்தகாரர்<br>4. திரு. வே. தங்கராஜ், ஒப்பந்தகாரர்<br><br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்பரீதியாக சரிபார்க்கும் போது ஒப்பந்தகாரர் திருமதி. சிந்து பொதுப்பிரிவு எண் 2ன்படி ஒப்பந்தப்புள்ளியில் இணைக்கப்பட்டுள்ள படிவங்கள் A to H பூர்த்தி செய்யப்படவில்லை. மற்றும் ஒப்பந்துபுள்ளி வகுப்பு 4.1A5 நிபந்தனை பூர்த்தி செய்யப்படவில்லை.<br><br>ஜெயவைரவன் இஞ்சினியரிங் கோ (பி) லிட். பொதுப்பிரிவு எண் 2ன்படி ஒப்பந்தப்புள்ளியில் இணைக்கப்பட்ட படிவங்கள் A to Hல் A, B, C, D, E & H படிவங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை.<br><br>திரு. எஸ்.ரம்போலா ஒப்பந்தகாரர் ஒப்பந்தப்புள்ளி விதி எண் 4.1.A5 & 4.1B பொதுப்பிரிவு 2 A to H பூர்த்தி செய்யப்படவில்லை. மற்றும் 4.1.A5 படிவங்கள் இணைக்கப்படவில்லை. மற்றும் 4.1Bல் நோட்டரி பப்ளிக் கையொப்பம் இடவில்லை.<br><br>எனவே மேற்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப ரீதியாக தள்ளுபடி செய்யப்படுகிறது. மீதமுள்ள ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விலை விகிதம் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>திரு. வே. தங்கராஜ், ஒப்பந்தகாரர் – மதிப்பீட்டை விட 1.94% குறைவு ரூ.18934789.70<br><br>பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. வே.தங்கராஜ், ஒப்பந்தகாரரிடமிருந்து விலைக்குறைப்பு கடிதம் கேட்கப்பட்டு அசல் மதிப்பீடு தொகையினை விட 1.98% குறைவு ரூ.18926985.35 கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தகாரரின் ஒப்பந்தபுள்ளியினை ஒப்புக்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்<br>இ1/20352/12 | 28) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 10. | தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2012–13ன் கீழ் சிப்பம் 2ல் கண்டுள்ள சாலை பணிகளுக்கு 31.01.2013 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. வரப்பெற்ற ஐந்து ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு<br>1. திருமதி சிந்து, ஒப்பந்தகாரர்<br>2. ஜெயவைரவன் இஞ்சினியரிங் கோ (பி) லிட்.<br>3. திரு. இன்னாசிமுத்து, ஒப்பந்தகாரர்<br>4. திரு. எஸ். சுதர்சன், ஒப்பந்தகாரர்<br>5. திரு. எஸ். ரம்போலா, ஒப்பந்தகாரர்<br><br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்பரீதியாக சரிபார்க்கும் பொழுது ஒப்பந்தகாரர் திருமதி. சிந்து பொதுப்பிரிவு எண் 2ன்படி ஒப்பந்தப்புள்ளியில் இணைக்கப்பட்டுள்ள படிவங்கள் A to H சரிவர பூர்த்தி செய்யப்படவில்லை. மற்றும் ஒப்பந்த நிபந்தனை வகுப்பு 4.1A5 நிபந்தனை பூர்த்தி செய்யப்படவில்லை. | 29) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

ஜெயவைரவன் இஞ்சினியரிங் கோ (பி) லிட். இஞ்சினியரிங் கம்பெனி பொதுப்பிரிவு எண் 2ன்படி A to H படிவங்களில் A, B, C, D, E & H படிவங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை.

திரு. எஸ்.இன்னாசிமுத்து ஒப்பந்தகாரர் பொது நிபந்தனை A முதல் Hல் பிரிவு G & H பூர்த்தி செய்து கையொப்பம் செய்யவில்லை. எனவே மேற்கண்ட மூன்று ஒப்பந்தங்களும் தொழில்நுட்ப ரீதியாக தள்ளுபடி செய்யப்படுகிறது.

மீதமுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் பெறப்பட்ட விலைவிகிதம் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

1) திரு. எஸ். சுதர்சன், ஒப்பந்தகாரர் – மதிப்பீட்டை விட 5.33% அதிகம் (ரூ.21079230/–)
2) திரு. எஸ். ரம்போலா, ஒப்பந்தகாரர் – மதிப்பீட்டை விட 4.72% அதிகம் (ரூ.20917138.50)

பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. எஸ்.ரம்போலா அவர்களிடம் விலைக்குறைப்பு கடிதம் கேட்கப்பட்டு அதில் மதிப்பீடு தொகையினை விட 0.26% குறைவு ரூ.19922546.05 கொடுத்துள்ளார். மேற்படி ஒப்பந்தகாரரின் ஒப்பந்தபுள்ளியினை ஒப்புக்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்

இ1/20352/12

மாமன்றம், தூத்துக்குடி
நாள் : 05.02.2013

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி